191—

நீலகிரி மாவட்ட மக்களுக்கு காட்டேரி அணையிலிருந்து குடிநீர்.

*?9472—டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டம் காட்டேரி அணையிலிருந்து அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டேரி அணை என்பது மலையினுடைய உயரமான இடத்தில் கட்டப்பட்ட அணை ஆகும். அங்கிருந்து கீழே உள்ள சேலாஸ், பாரதி நகர். அண்ணா நகர், தக்காச்சி கண்டலா போன்ற பகுதிகளில் மக்கள் குடிநீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த உயரமான இடத்திலிருந்து குடிநீர்க் குழாய் இணைக்கப்பட்டால் எளிதாகக் குறைந்த செலவில் மேற்கண்ட பகுதிகளில் உள்ள மக்களுக்குக் குடிநீர் கிடைக்கும் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த காட்டேரி அணையிலிருந்து குடிநீர் கிடைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் காட்டேரி அணைப்பாதுகாப்பு அமைச்சகம் வசம் உள்ளது. இந்த அணையில் இருந்து அரவங்காடு கார்டைட் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. மேலும் இந்த அணையிலிருந்து வெள்ளூர் அணைக்குச் செல்லும் நீர் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பராமரிப்பில் உள்ளது. எனவே, இவ்விரு துறைகளின் அனுமதி பெற்ற பின்னரே இப்பகுதிகளில் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள இயலும். தற்போது இதற்காகத் திட்டம் எதுவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயற்குறிப்பில் இல்லை. எனவே இது பற்றி அரசு பரிந்துரை செய்து, மேற்கூறிய அமைச்சகங்களிலிருந்து பரிந்துரை பெறப்பட்டு இதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 192, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை.

வினா எண். 193, திரு. ஆர். தங்கராஜ் இருக்கையில் இல்லை.

வினா எண். 194, டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

194—

பரமக்குடி தொகுதியில் கால்நடைத் தீவன புல் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம்.

*9118—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் கீழ் கால்நடைத் தீவனப் புல் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் ?

திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் நிரந்தர வறட்சி மாவட்டமாக அமைந்துள்ளது. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் கால்நடைகளைப் பராமரிக்கும் தொலைநோக்கு எண்ணத்தில் செயல்படும் திட்டத்தின் ஒரு பகுதியாக கால்நடை தீவனப் புல் பண்ணை ஆரம்பிக்க பரமக்குடி அருகில் உள்ள உரப்புளி பஞ்சாயத்தில், பரமக்குடி ஒன்றியத்தில் ஆரம்பிக்க இடங்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்டன. அதிகக் கால்நடைகள் உள்ள பரமக்குடி பகுதியில் இந்த கால்நடை தீவனப் புல் பண்ணையை ஆரம்பிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்